# கூட்டமைப்பை விட்டு வெளியேறியோர் வென்றார்கள் என்ற சரித்திரம் இல்லை

## முன்னாள் எம்.பி. சரவணபவன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கூடு. இந்தக் கூட்டை எவராலும் உடைக்கவோ அழிக்கவோ முடியாது. அழிக்க முற்பட்டவர்கள் எல்லோரும் அழிந்துபோனமையே வரலாறு.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

யாழ். ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எமது தாயகப் பிரதேசம் சிங்களப் பேரினவாதிகளாலும் அவர்களது கொந்துராத்துக்காரர்களாலும் கொஞ்சம் கொஞ்சமாகச் சூறையாடப்படுகின்றது. நல்லூரைத் தம் ஊர் எனச் சொந்தம் கொண்டாட முயல்பவர்கள், கந்தரோடைக்கும் ஒரு கதையை கூறிக்கொண்டு வருவார்கள். எனவே, நாங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கத் தயாராக இருக்க வேண்டும்.

இந்த அரசு பேரினவாதிகளால் கட்டமைக்கப்பட்ட அரசு. எனவே, பேரினவாத செயற்பாடுகள் தடையின்றி இடம்பெற வழிவகுக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குவங்கியை உடைக்க வேண்டும், தமிழர்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்க வேண்டும் என்பதில் சிங்கள தேசம் ஒற்றுமையாகவுள்ளது. ஆனால், நாம்தான் நமக்குள் முரண்பட்டு நிற்கின்றோம்.

கூட்டமைப்பிலிருந்து நாம் யாரையும் கட்டாயப்படுத்தி வெளியேற்றியது கிடையாது. தாமாகவே அனைவரும் வெளியேறினார்கள்.

முக்கியமாக மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் மற்றும் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் தமது இருப்பு கேள்விக்குறியானதுடன் வெளியேறினார்கள்.

எனினும், 'வீடு' எனும் இந்தக் கூட்டை விட்டு வெளியேறியவர்கள் வென்றனர் என்ற சரித்திரம் கிடையாது. இனிமேலும் அப்படி ஒரு சரித்திரம் உருவாகப்போவதுமில்லை. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பதன் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எமது மக்கள் சார்பாகப் பேரம் பேசும் சக்தியாக உருவாக முடியும் – என்றார்.

# நல்லூரில் பக்தர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அனுமதிக்குமாறு வழிகாட்டல்

## இராணுவத் தளபதிக்குப் பிரதமர் பரிந்துரை

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு அதில் கலந்துகொள்ளும் பக்தர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அனுமதிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார்.

இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் வேந்திர சில்வா, இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், பிரதமர் அவருக்கு இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலை அடுத்து, சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக, அதிகளவில் மக்கள் கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் திருவிழாவில் வழக்கமாக பல்லாயிரக் கணக்கானவர்கள் பங்கேற்கும் நிலையில், இம்முறை கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக அதிகம் பேர் பங்கேற்க முடியாமல் மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, ஆலய ஊழியர்கள், இந்துக் குருமாருடன் திருவிழாவை நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவில் குறைந்தளவிலாவது பக்தர்களை ஆலய வளாகத்துக்குள் அனுமதிக்க வேண்டும் எனப் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, குறித்த கோரிக்கையினை பரிசீலனை செய்த பிரதமர் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி அதிகளவில் பக்கதர்கள் பங்கேற்ற வழிசெய்யுமாறு பணித்துள்ளார்.

இது தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்கவுடனும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் தொலைபேசி மூலம் பேசினார் என அறிய வந்தது.

# ஆற்றில் மாயமான இளைஞனைத் தேடும் கடற்படை சுழியோடிகள்

கொழும்பு, ஜூலை 18

கெபுன்கொட பிரதேசத்தில் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த நான்கு இளைஞர்களில் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீரில் மூழ்கி மீட்கப்பட்ட மற்றுமொரு நபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மினுவங்கொடை பிரதேசத்தை சேர்ந்த 18 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

பொலிஸார் மற்றும் கடற்படை சுழியோடிகள் இணைந்து காணாமல் போன இளைஞரை தேடி வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# யாழ். பல்கலை பேரவை உறுப்பினர் பதவி; இராஜினாமச் செய்கிறார் சுரேன் ராகவன்



யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து தாம் இராஜினாமாச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளார் என முன்னாள் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டபீடத்தின் விரிவுரையாளர் சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதிமன்றில் முன்னிலையாவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அழுத்தத்தின் பேரில் கடந்த வருடத்தின் பிற்பகுதியில் பல்கலைக்கழக பேரவை தடை விதித்தமை காரணமாக, அவர் தன்னுடைய விரிவுரையாளர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யவேண்டிய துரதிஷ்டவசமான நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே ஒரு கல்விமானாக நான் அவருக்கு ஆதரவை தெரிவிப்பதோடு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பேரவைக்குழு உறுப்பினர் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்யத் தீர்மானித்துள்ளேன் என்று முன்னாள் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக உயர்கல்வி அமைச்சரைச் சந்தித்துத் தனது இராஜினாமாக் கடிதத்தைக் கையளிப்பதுடன் கலாநிதி குருபரனுக்கு ஏற்பட்டுள்ள நிலை தொடர்பிலும் கலந்துரையாடுவதற்கு தீர்மானித்துள்ளார் எனவும், கல்விமானொருவருக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைக்கு ய்ஷீவீபு போன்ற இயக்கம் மௌனமாக இருப்பதும் ஆரோக்கியமான விடயமல்ல என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன், கல்விமான்களின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் தனது முகப்புத்தகத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சர்வதேசப் பொறியிலிருந்து படையினரை மீட்டது ஐ.தே.க.

## மஹிந்த அணிக்கு விஜேவர்தன பதிலடி

சர்வதேச அழுத்தங்களிலிருந்து படையினரை ஐக்கிய தேசியக் கட்சி அரசே பாதுகாத்தது. எமது புலனாய்வுப் பிரிவு பலவீனப்படுத்தப்படவில்லை.

–இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரும் முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

புலனாய்வுத் துறையினரை வேட்டையாடுவதற்கோ, புலனாய்வுக் கட்டமைப்பைப் பலவீனப்படுத்துவதற்கோ எமக்குத் எந்தத் தேவையும் இல்லை. நாம் எமது ஆட்சியில் அதைச் செய்யவும் இல்லை.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் சில கொலைகள் நடந்துள்ளன. கடத்தல் சம்பவங்களும் பதிவாகின என மக்கள் மத்தியில் கருத்து நிலவியது. அவை தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்று 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது நாம் உறுதி வழங்கியிருந்தோம்.

அதன்படி விசாரணைகள் நடைபெற்றன. அந்தச் சம்பவங்களுடன் சில புலனாய்வு அதிகாரிகள் தொடர்புபட்டுள்ளனர் என்று தெரியவந்தது. அவர்களுக்கு அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு அதைச் செய்திருக்கலாம். அப்படியான விசாரணை மேற்கொள்ளப்பட்டபோதே புலனாய்வுப் பிரிவினரைப் பலவீனப்படுத்துகின்றோம் என்று எதிரணியால் பரப்புரை முன்னெடுக்கப்பட்டது.



புலனாய்வுத்துறையைப் பலவீனப்படுத்த நாம் முயற்சிக்கவில்லை. ஓரிருவருக்கு எதிராக நடத்தப்படும் விசாரணையால் ஒட்டுமொத்தப் புலனாய்வுப் பிரிவுக்கும் அவமதிப்பு ஏற்படாது.

சர்வதேசத்திடம் இராணுவத்தைக் காட்டிக் கொடுத்தோம் என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். நாம் ஆட்சியைப் பொறுப்பேற்றபோது நாட்டுக்கு எதிராகக் கடும் சர்வதேச அழுத்தங்கள் இருந்தன. பொருளாதாரத் தடைகள் கூட விதிக்கப்பட இருந்தன. நாம் தலையிட்டுத்தான் இந்த நிலைமையை மாற்றினோம். படையினரின் கௌரவத்தைப் பாதுகாத்து பொருளாதாரத் தடையையும் நீக்கினோம் – என்றார்.

# நான் பெற்றுக் கொடுத்த சமாதானத்தினால்தான் கூட்டமைப்பினர் இன்று அரசியல் செய்கின்றனர்

## இப்படிக் கூறுகின்றார் கருணா அம்மான்

அம்பாறைமாவட்டத்தில்கொக்கரிக்கின்றகோடீஸ்வரன் ஏன் தமது மாவட்டத்தின் மக்களைக் கண் திறந்து பார்க்க முடியாமல் உள்ளார்? அவருக்கு நான் இன்று பெற்றுக் கொடுத்துள்ள சமாதானத்தினால்தான் இந்தளவு மேடை களில் நின்று குரல் கொடுக்கக்கூடியதாக உள்ளது.

அவ்வாறு அல்லாமல் இருந்தால் அவர்களுக்கு கத்துவதற்கு குரல் இல்லாமல் இருந்திருக்கும். வரலாறு களை மறந்து பேசுவதை கூட்டமைப்பு நிறுத்த வேண்டும் என்று கருணா அம்மான் தெரிவித்துள்ளார்.

கருணாஅம்மான்அம்பாறையில்தமிழ்வாக்குகளைச் சிதறடிக்க வைப்பதற்காகவே இங்குவந்து போட்டியிடுகின் றார் என்றும், தனது வாக்கையே தனக்கு அளிக்கமுடி யாத கருணா அம்மான் என்றும் கூட விமர்சனங்கள் வருகின்றன. இதற்கெல்லாம் அஞ்சமாட்டேன். நான் மக்களின் அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 60 வருடங்களுக்கு முன்பு இருந்து வந்த 42 க்கும் மேற்பட்ட இந்து ஆலயங் கள் தற்போது அழிக்கப்பட்டு தடயங்களுடன் நிலம் மாத்திரம் காட்சியளிக்கின்றது. அது போன்று பழமை மிகு 22 கிராமங்கள் வேறு கிராமங்களுடன் உள்வாங்கப் பட்டு வருவதையும் அவதானித்ததன் பின்னர்தான் அம் பாறை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் முடிவை எடுத்துக்கொண்டேன் என்றும் கருணா அம்மான் தெரிவித்தார்.

ஆலயங்கள் அழிக்கப்படுவதும், தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுவதுமாக நிலங்களில் அத்து மீறிய குடியேற்றங்கள் தொடர்கின்றன. இயற்கை நீர்நிலைகளை நிரப்பி கட்டுமானப்பணிகளை முன்னெ டுப்பதும் போன்ற நிகழ்ச்சி நிரல் தங்குதடையின்றி இடம் பெற்றுவருகின்றன. இவற்றைக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்கள் இதுவரை கண்டு கொள்ளவில்லை. மாறாக, மரக்கடத்தல்களைத் தொடர்ந்தபடி மர ஆலை களையும் அமைத்துக்கொண்டு தங்களின் பைகளை நிரப்புகின்றனர். இவர்கள் என்னை விமர்சிக்கத் தகுதி யற்றவர்கள் என்றும் கருணா அம்மான் தெரிவித்தார்.

என்னுடைய வாழ்க்கையில் நான் என்னை விமர் சிப்பவர்கள் போன்று உல்லாசமாக வீடுகளில், ஏசி அறை களில் வாழவில்லை. இளமைக் காலத்தில் தமிழ் மக்க ளுக்காக போராட்டத்தின் போது காடுகளிலும் மலைகளி



லும் வெயிலிலும் மழையிலும் தூக்கமின்றி என்னுடைய இளமைக்ககாலத்தை கழித்தவன். என்னுடைய சுய நலனைப் பாத்திருந்தால் நானும் மற்றவர்களை போன்று ஏசி அறையிலும் மின்விசிறிக்குக் கீழும் தூங்கியிருப் பேன்.

என்னைப்பற்றி நான் சிந்திக்கும் போது வாழ்க்கை யில் நான் சாதனை படைக்கவேண்டியவன். ஒரு வைத்தி யராக மக்களுக்கு பணியாற்றியிருக்கவேண்டிய நான் இன்று காலத்தின் கட்டாயத்தால் இவ்வாறு அரசியலில் நிற்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானேன்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் என்ன அபிவிருத்தி யைச் செய்திருக்கின்றனர்? நல்லாட்சி அரசாங்கத்தின் சலுகைக்காக அவர்களின் கருத்துக்களுக்கு கையசைத் துக்கொண்டு, சலுகையைப் பெற்றுக்கொண்டு, மக்க ளின் நலன் பால் அக்கறை காட்டாதவர்கள்தான் இந் கூட்டமைப்பினர். இம்முறை சம்பந்தன் ஐயா 20 ஆச னங்களை பெறப்போவதாக கூவுகின்றார். ஆனால் மக் களின் தீர்ப்பு இம்முறை 13ஆசனங்களுக்கு மேல் பெற முடியாது என்பதை நான் இந்தத் தேர்தல் காலத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்.

நான் வேறுமனே வார்த்தை ஜாலங்களால் மக்களை ஏமாற்றுபவன் அல்லன். தேர்தல்காலங்களில் உணர் வுள்ள தமிழன் போன்று உணச்சியை கக்கித் திரியும் கூட்டத்தவனுமல்லன். மக்களுக்குச் சொல்வதை செய் வதற்கான ஆணையை மக்கள் தருவார்களாயின் நான் மக்களின் தேவையுணர்ந்து செயல்படுவேன். - என்றும் கருணா தெரிவித்தார்.

# ஐ.தே.கவினரை வளைத்துப் போட மொட்டுக் கட்சியில் தனிப் பிரிவு

### 'பச்சை ஒளி' (கொல எலிய) என்ற பெயரில்



கொழும்பு, ஜூலை 18

ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக பிளவுபட்டுள்ள நிலையில் அக்கட்சியின் ஆதரவாளர்களை தம்பக் கம் வளைத்துப்போடும் முயற்சியில் இறங்கியுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, இதற்காக 'பச்சை ஒளி' (கொல எலிய) எனும் அமைப்பையும் உருவாக்கி யுள்ளது.

ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை யகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது அக்கட்சியின் உறுப்பினரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இந்த தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வரு மாறு–

ஐக்கிய தேசியக்கட்சி இரண்டாக பிளவுபட்டதன் பலனாக அக்கட்சியின் ஆதரவாளர்கள் பலர் எம்முடன் இணைந்துவருகின்றனர். மாவட்ட மட்டத்தி லும் இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பரந்தப்பட்ட கூட்டணி அமைத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அழைப்பு விடுத்ததால் அவர் களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அவர்களை நாம் பாதுகாப்போம். தற்போது 'கொல எலிய' (பச்சை ஒளி) எனும் அமைப்பை உருவாக்கியுள்ளோம். ஐக்கிய தேசியக்கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் பலர் இவ்வமைப்பில் இணைந்துள்ளனர். ஏனை யோருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

அதேவேளை, புதிய கருத்து கணிப்பின் பிரகாரம் 139 ஆசனங்களை நாம் வெல்வது தற்போது உறுதி யாகியுள்ளது. இனிவரும் நாள்களில் நிலைமை மாறும். எனவே, மூன்றிலிரண்டுக்கு அப்பால் பெறு வோம். - என்றார்.

# நகையகத்தில் தங்கச் சங்கிலியை சூறையாடியவர்கள் மடக்கிப் பிடிப்பு

### பொகவந்தலாவையில் நேற்று சம்பவம்

கொழும்பு, ஜூலை 18

பொகவந்தலாவை நகரிலுள்ள ஜுவல்லரியொன்றில் போலி சங்கி லியை வைத்துவிட்டு, தங்க சங்கிலியை அபகரித்துச் சென்ற மூவரை பொக வந்தலாவ பொலிஸார் மடக்கிப பிடித் துள்ளனர்.

நீர்க்கொழும்பு மற்றும் திவுலபிட்டிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தப்பிச்சென்ற காரும், அவர்கள் வசமிருந்த சில போலி நகைகளும் மீட் கப்பட்டுள்ளன.

பொகவந்தலாவை நகரிலுள்ள ஜுவல்லரியொன்றுக்கு நேற்றுச் சென்ற நபரொருவர், தங்கச் சங்கிலி வாங்க வேண்டும் என கூறி, உள்ளவற்றை காட் டுமாறு கோரியுள்ளார்.

இதன்படி கடை உரிமையாளர்களும் தங்கசங்கிலிகளைக் காட்டியுள்ளனர். அவற்றில் ஒன்றை தெரிவுசெய்துவிட்டு, காரில் உள்ளவர்களுக்குக் காண்பித்து விட்டு வருகின்றேன் என கூறிய அவர், காரில் ஏறிய பின்னர் தப்பிச்சென்றுள் ளார். அத்துடன், குறித்த தங்க கடையில் போலியான சங்கிலியொன்றையும் அவர் விட்டுச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் பொகவந்தலாவை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து திருடர்களைத் துரத்திச் சென்ற பொலிஸார், ஹட்டன் பலாங் கொடை பிரதான வீதியின் பெற்றோசோ சோதனைச் சாவடியில் வைத்து அவர் களை மடக்கிப் பிடித்தனர்.

காருக்குள் மூவர் இருந்துள்ளனர். அத்துடன், போலிநகைகளும், கொள்ளை யடிக்கப்பட்ட சங்கிலியும் மீட்கப்பட்டுள் ளன. விசாரணைகள் தொடர்கின்றன. கைதானவர்கள் நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

திட்டமிட்ட அடிப்படையில் இக்குழு வினர் இவ்வாறு கொள்ளையடிப்பில் ஈடுபட்டுவந்துள்ளனரா என்பது தொடர் பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

# 219 பேர் கேப்பாபிலவிலிருந்து இரு வார தனிமைப்படுத்தலின் பின் வெளியேறினர்

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படைத்தள தனிமைப்படுத்தல் கண்கா ணிப்பு நிலையத்தில் 14 நாள்கள் கண் காணிப்பினை நிறைவு செய்த 219 பேர் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளனர்.

தென்கொரியாவிலிருந்து கடந்த 02 ஆம் திகதி நாடு திரும்பியவர்கள் கட்டு நாயக்க விமான நிலைத்தில் இருந்து தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படைத்தள தனிமைப்படுத்தல் கண்கா ணிப்பு நிலையத்திற்கு அழைத்து வரப் பட்டனர். இவர்கள் 14 நாள்கள் கண் காணிப்பு மற்றும் பி.சி.ஆர் பரிசோத னையின்போது இவர்களுக்கு கொரோனா தொற்று கண்டறியப்படாத நிலையில் இவர்கள் இன்று அதிகாலை 4.00 மணி யளவில் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர்.

இதன் போது, தனிமைப்படுத்தலை நிறைவு செய்த அனைவருக் கும் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது. கடற்படையினரின் பாதுகாப்புடன் இவர் கள் 7 பஸ்களில் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் கர்ப் பிணி பெண் ஒருவர் உள்ளிட்ட 06 பெண் களும் 03 சிறுவர்களும் 210 ஆண்க ளும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக் கப்படுகிறது.

# கொரோனாப் பீதிக்கு மத்தியில் ஆள்கடத்தல்

### கடற்படையின் கண்காணிப்பு நடவடிக்கை தீவிரம்

கடந்த ஜூலை மாதம் 15ஆம் திகதி முதல், இலங்கைக்கும் இந்தியாவுக்கும்இடையிலானவடக்குகடற்பரப்பில்கண்காணிப்பு நடவடிக்கைகளை இலங்கை கடற்படையினர் தீவிரப்படுத்தி யுள்ளனர். அத்தோடு, அப்பகுதியில் சந்தேகத்துக்கிடமான கப்பல்களைச் சோதனை செய்து வருகின்றனர் எனவும் வடக்கு கட்டளை பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலுடன், இந்தியா வில் வசிக்கும் தமிழ் அகதிகள் சிலரும் இந்தியக் கடத்தல் காரர்களும் இலங்கைக்கு தப்பி வருவது அதிகரித்துள்ளதன் காரணமாக இந்த நடவடிக்கையை கடற்படை எடுத்துள்ளது என வடக்கு கட்டளைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த சிலருடன் இணைந்து போதைப்பொ ருள் கடத்தலில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரைக் கடற்படையினரும் விசேட அதிரடிப்படையி னரும் இணைந்து அண்மையில் கைதுசெய்திருந்தனர். அவர் கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப் பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தியாவிலிருந்து படகு மூலம் இலங்கைக்குத் தப்பி வரு வதற்கு பாரிய குழுவினர் தயாராகவுள்ளனர் எனவும் விசார ணையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு இலங்கைக்கு வருவதற்கு இருந்த குழுவினரை படகு மூலம் இலங்கைக்கு சட்டவிரோதமாகக் கடத்தும் நடவடிக்கையில் இந்திய மீனவர்கள் சிலர் ஈடுபடுகின்றனர் எனவும், இவ்வாறு இலங்கைக்கு அழைத்துவர 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் இந்திய ரூபா அறவிடப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இந்தத் தகவல்கள் கிடைத்தைத் தொடர்ந்து, சட்டவிரோத வருகைகளைத் தடுக்கும் வகையில், வடக்கு கடற்பரப்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளைக் கடற்படை யினர் தீவிரப்படுத்தியுள்ளனர்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.07.2020 இல் வெளியிடப்பெற்றது.